விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆவணி 21 ஜுலிகம் 17 இதழ் 205
யாழ்ப்பாணம் திங்கட் கிழமை 6—9—82

BETTER BUY
UNIFO
STEEL CABINETS
Manufacturers and Distributors.
U. F. O.
INDUSTRIES LTD.
4430

## யாழ். நகரில் புதிய சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் திடீரென பல இடங்களில் புதிய உத்வேகத்துடன் சுவரொட்டிகள் தலை காட்டத் தொடங்கியுள்ளன.

மரண தண்டனை பெற்ற குட்டிமணியும், ஜெகனும் நீதி மன்றத்தில் கடைசியாகத் தெரிவித்த 'ஆசைகள்' இச் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

★'இலங்கை தமிழருக்கு பாதுகாப்பு ★குட்டிமணி, ஜெகனை விடுதலைசெய்க'

# தமிழகத்தில் பரந்த அளவில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்!

## தி. மு. கழகத்தின் மற்றுமொரு திட்டம்!

சென்னை, செப்.5

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், அண்மையில் இலங்கையில் மரண தண்டனைத் தீர்ப்புப் பெற்ற குட்டிமணியையும், ஜெகனையும் விடுதலை செய்யுமாறு கோரியும் தமிழ்நாட்டில் பரவலாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்த திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்ட தீர்மானத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை தமிழகம் பூராவும் நடத்த முன்னர் இலங்கை அரசாங்கத்துக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் ஆட்சேபக் கடிதங்கள் அனுப்புவதென்றும் சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதுவரிடம் மீண்டும் மற்றுமொரு மனு சமர்ப்பிப்பதென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழகம் பூராவும் நடத்தப்பட விருக்கும் உத்தேச ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஒரே நாளில் நடத்துவதுவதா அல்லது மாவட்ட ரீதியில் நடத்துவதா என்பது பற்றி அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கனவே ''இலங்கைத் தமிழர்பாதுகாப்பு தின''த்தை சென்னையில் அனுஷ்டித்ததும், சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதுவர் அலுவலகத்தில் மகஜர் சமர்ப்பித்ததும் தெரிந்ததே.

## சீனாவில் மற்றுமொரு 'புரட்சி!'
## தலைவர் பதவியை நீக்க முடிவு!

பீகிங். செப். 5

சீனகம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் பதவியை ரத்துசெய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாசேதுங்கினால் ஏற்படுத்தப்பட்ட இத்தலைவர் பதவி இனிமேல் இருக்க மாட்டாதென்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

பொதுச்செயலாளரே கட்சிக்குத் தலைமைதாங்குவாரென்றும் கூறப்பட்டது உபதலைவர் பதவிகளும் நீக்கப்படவுள்ளன. (வெ)

## ★ 1980 ஜூலை பொதுவேலைநிறுத்தம்: வேலையிழந்தோர்நிலைகுறித்து ஜனாதிபதியை 'அமிர்' சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)
1980 ஜூலை பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலையிழந்திருக்கும் ஊழியர் நிலைமை குறித்து எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதியுடன் நாளை பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்

யாழ். செயலகத்தைப் பொறுத்தவரை இதுவரை வேலையிழந்திருக்கும்152பேரின் பெயர்ப்பட்டியல் விபரங்கள் தமிழ்தொழிற்சங்ககூட்டணிக்குக் கிடைத்துள்ளது. இவர்களில் அதிகமானோர் உள்நாட்டமைச்சைச் சேர்ந்த ஊழியர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின நிலைமை குறித்து தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவரும், கோப்பாய் எம்.பி. யுமான திரு. ஆ. மு. ஆலால சுந்தரம் தலைமையில் எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. தி. சதாசிவம், பொதுச்செயலாளர் திரு க.க. உருத்திரன், உதவி நிதிச்செயலாளர் திரு. ந. திருஞானசம்பந்தன், அரசாங்க எழுது வினைஞர் சங்க யாழ். கிளை நிர்வாக உறுப்பினர் திரு. ஐ. இரத்தினம் ஆகியோரைக் கொண்ட கோஷ்டியொன்று எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கத்தை தெல்லிப்பழையிலுள்ள அவரது அலுவலகத்தில் இன்று சந்திக்கவுள்ளது. (மா)

## யோகேஸ்-குமார் சந்திப்பு
### ஜனாதிபதி தேர்தல்: ஆதரவு கோரினார்

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் நேற்று யாழ் எம். பி. திரு வெ. யோகேஸ்வரனைச் சந்தித்து, தமக் ஆதரவு வழங்கும்படி கேட்டுக் கொண்டதாகத் தெரியவருகிறது.

இச்சந்திப்பு திரு. யோகேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்றது

இச்சந்திப்பின்போது; தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபைக் கூட்டத்தில் தமக்கு ஆதரவு தெரிவித்து வாதாடும்படி திரு. குமார்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் 5,400 வழக்குகள்!
### விரைவாகத் தீர்த்துவைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஐயாயிரத்துநாநூறு வழக்குகள் விசாரணை செய்யப்படாமலிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த வழக்குகளில் சுமார் 3,000 வழக்குகள் பத்துவருட காலத்துக்கும் மேற்பட்டவை என்றும் சுமார் 1,500 வழக்குகள் பதினைந்து வருடத்துக்கும் மேற்பட்டதென்றும் அறியப் படுகிறது.

இவ்வழக்குகளை விரைவாகத் தீர்த்துவைக்க இப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அடுத்த பத்தாண்டுகளில் வறிய மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்
### உலக வங்கி அறிவிப்பு

லண்டன், செப். 5

அடுத்த பத்தாண்டுகளில் மிக வறுமையான நிலையில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று உலகவங்கி அறிவித்துள்ளது.

கிழக்காசியப் பகுதிகளில் உள்ள நாடுகளில் அடுத்த இருபதாண்டுகளில் பிறப்பு விகிதம் அதிகரிக்குமென்றும் உலகவங்கி தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் இப்பிறப்பு விகிதம் 28 லட்சமாகவும், பிலிப்பைன்சில் 26 லட்சமாகவும், இந்தோனேஷியாவில் 75 லட்சமாகவும் அதிகரிக்குமாம். (வெ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொக்குவில் மருத்துவ பீடத்திற்கு முன் கோணமலை வைரவ கோவில் முன் ரோட் ஓரத்தில் 100 யார் தூரத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. தரகர்கள் தேவையில்லை. திருநெல்வேலிச் சந்தி 'வெஸ்கோ' கோப்பிபாரில் தொடர்புகொள்ளவும். 4433

சொந்தப் பாவிப்பிலுள்ள EY 4250 சோமசெற் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. சுப்பிரமணியம், (சட்டத்தரணி) 6/2, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4439

யாழ் நகருக்குள் அரியாலை சந்தைக்கும் கண்டி ரோட்டிற்கும் 100 யார் தொலைவில் உள்ள வீடு கட்டுவதற்கு வசதியான 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்— திருமதி. பொ. நல்லம்மா, 44, திருமகள் வீதி, அரியாலை. யாழ்ப்பாணம். 4431

'எண்ஜோதிடமன்னன்' வி ஏ. சிவராசா பி. ஏ பி. எல் எழுதிய 'எண்ஜோதிடம்' நூல் விற்பனையாகிறது. இந்நூலின் மூலம் உங்களுக்குரிய எண் எதுவென்பதைத் தெரிந்துகொண்டு உங்கள் வாழ்க்கையின் பலாபலன்களை தெளிவாகவும், விரிவாகவும் படித்து அறியலாம். ரூபா 18-50. ஸ்ரீலங்கா புத்தகசாலை, 232, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4444

## தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விசேட பயிற்சிபெற்ற 29வயது ஆசிரியருக்கு மணமகள்தேவை சீதனம், குறிப்பு முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். ஆசிரியை விரும்பப்படுவர். விளம்பர இல: 4446, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4446

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 36 வயது பட்டதாரி ஆசிரியைக்கு அதே குலத்தைச் சேர்ந்த மணமகன் தேவை தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முதற் கடிதத்திலேயே விபரங்களுடன் சாதகக் குறிப்பும் அனுப்பிவைக்கவும். விளம்பர இல: 4443, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4443

## தவறிவிட்டது

துர்க்கை அம்மன் கோவில் தேர்த்திருவிழாவில், கோவில் முகப்பு வாசல் சுற்றுடலில் சங்கிலியுடன் தாலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ரி சிவானந்தன், 460, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4455

## நிர்வாகிகள்

(இலுப்பைக்கடவை)

இலுப்பைக்கடவை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கள்ளியடி அரசினர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர். தலைவர்: திரு. [illegible] முத்து, செயலாளர்: திரு. கு. வீரசிங்கம், பொருளாளா; திரு: பொ. விஜயன்.

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும் சங்கீதம் முதலாம், இரண்டாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்பாடுகின்றன.

### மூன்றும் பகுதி மானிப்பாய்

### முதலாம் பிரிவு

சுவேந்தினி செல்வரத்தினம் பாட்டு, 0 f சியாமளா கணேஸ்பரன் வீணை 0 குகப்பிரியா பாட்டு' 0 f குகப்பிரியா சோமஸ்கந்தன்வீணை,0 சிவேந்திரா ஏகாம்பரம் பாட்டு வயலின், 0 சிவநுதா ஏகாம்பரம் பாட்டு, 0 நிர்மலாதேவி இராசரத்தினம் வீணை, 0 f சிவகெங்கா சிவப்பிரகாசப்பிள்ளை பாட்டு, வீணை, f ஆதிரை பத்மநாதன் பாட்டு. பாலேஸ்வரி நாகலிங்கம் பாட்டு, 0 மிருணளினி கார்த்திகேசு பாட்டு. 0 f சுதர்சினி கார்த்திகேசன் பாட்டு, 0 மாலினி நடேசு பாட்டு, 0 செல்வினி செல்லத்துரை வயலின், 0 f சுகிர்தினி திருச்செல்வம் பாட்டு.

### இரண்டாம் பிரிவு

சாந்தினி தட்சண பரிபாலா பாட்டு, 0 சிவநுதா ஏகாம்பரம் வயலின், 0 கயல்விழி வேலுப்பிள்ளை பாட்டு, பவானி ஸ்ரீ வெங்கடேசன் பாட்டு.
0 சசி சுவப்பிரகாசம் பாட்டு
0 மீனு அருணசலம் பாட்டு
சாந்தினி செல்வராசா பாட்டு
சிவராஜினி கணபதிப்பிள்ளை பாட்டு, 0 மைதிலி துரைசிங்கம் பாட்டு. ஜெயகௌரி பொன்னுத்துரை பாட்டு, 0 தர்மபூபதி தர்மலிங்கம் பாட்டு 0 கலையழகி சிவானந்தம் வயலின்.

### சாதரண சித்தி பாட்டு

சிவசக்தி கிருஷ்ணபிள்ளை, கௌரி முருகேசு, வசந்தி பொன்னம்மலம், யசோதா திருநாவுகேரசு, சுமதி பொன்னம்பலம், கணேசன் செல்வராஜா, மாலினி வைரநாதன், சுகந்தி பாக்கிய நாதன், ராஹினி புவனேத்திரன். விஜயரஜனி சிவப்பிரகாசம், தயாளினி மாணிக்கம், கலாயினி

மாணிக்கம், மேளின்வேஜனி சவரிப்பிள்ளை, தேவநேசமகர் மெலா அந்திரஸ்பிள்ளை, சாந்தா சும்பிரமணியம், ஞானசோதி நடராஜா.
மான்விழி வேலுப்பிள்ளை (மே. பா) வயலின், காந்திமதி சாமிரட்ணசர்மா வீணை, ரோகினி பரராஜசிங்கம்.

### கொக்குவில்

### முதலாம் பிரிவு

0 வர்ணபவானி கந்தையா பாட்டு,0 ரெஜினி பஞ்சலிங்கம் பாட்டு, 0 கருணலதா கைலாயநாதன் பாட்டு, 0 பிரிபந்தி விஜயசிங்கம் வீணை, 0 ஜமுனா நடராஜா பாட்டு, லேகா சிவகுருநாதன் [மே பா] வயலின். 0 கலைச்செல்வி சண்முகதாஸ் பாட்டு, 0 ஷகலா சிவகடாச்சம் பாட்டு, 0 இராஜனி இரத்தினம் பாட்டு, ரஜனி சண்முகராஜன் (மே பா] வீணை, பிரேமா அம்பலவாணர் வயலின்.

### இரண்டாம் பிரிவு

0 கௌரி வைத்தீஸ்வரன் பாட்டு,f சுந்தரமூர்த்தி கோபிதாஸ் வயலின், 0 கிருத்திகாயினி சுப்பையா பாட்டு, 0 பாலசரஸ்வதி சுப்பிரமணியம் பாட்டு. ரமணி செல்வப்பிரகாசம் பாட்டு, மைதிலி சிவசுப்பிரமணியம் பாட்டு, 0 கஸ்தூரி அப்பாத்துரை பாட்டு, 0 ஜெயரூபசீலா நவரட்ணம் வயலின், 0 சிரோமினி இராசநாயகம் வயலின், சாந்தகுமாரி நடராசா [மே பா) வயலின். அபிராமி பாலசுப்பிரமணியம் பாட்டு, 0 லயஸ்ரீ மகாதேவா பாட்டு, 0 திருநங்கை சண்முகதாஸ் பாட்டு, 0 நிரஞ்சனா கணபதிப்பிள்ளை பாட்டு, பிரியதர்சினி சிவசுப்பிரமணியம் பாட்டு,

### சாதாரண சித்தி

சுகந்தி விநாயகமூர்த்தி பாட்டு, ஜெயந்தி செல்லத்துரை பாட்டு, நிருபா சிங்கமாப்பாணர் பாட்டு, யாழினி கணேசபிள்ளை பாட்டு,பாலாம்பிகை பாலசிங்கம் பாட்டு, டைனேஸ்வரி மார்க்கண்டு பாட்டு, மணிமேகலா சுப்பிரமணியம் வயலின் சுவர்ணலதா கைலாயநாதன் பாட்டு, கிருஷாந்தினி யோகேந்திரன் பாட்டு. சுதாமதி மகாராஜா பாட்டு, கலையரசி சிவராஜா பாட்டு, ஜெனதா ஜெயசீலன் மே பா) வீணை, ஞானசக்தி நடராசா வீணை, தர்ஷினி தர்மராஜா பாட்டு, சாந்தா பொன்னம்பலம் வீணை, சிவாஜினி யோகநாதன் (மே பா) பாட்டு.

### ஊர்காவற்றுறை

### முதலாம் பிரிவு

பொன்னம்பலம் குகநேசன் [மே பா வயலின், ஜக்குலின் ஆனந்தி அன்ரனிப்பிள்ளை பாட்டு, 0 மஞ்சுளாதேவி இராசையா பாட்டு-வயலின், f இதயராணி நல்லதம்பி பாட்டு, அமலா மெலானி விஜயகுமார் [மே பா] வயலின்

0 f ரோகிணி விஸ்வேஸ்வர ஐயர் பாட்டு, 0 f அன்னமலர் கோகிலாம்பிள்ளை பாட்டு, 0 f உமா சண்முகரத்தினம் பாட்டு.

### இரண்டாம் பிரிவு

0 சீதா சிவகுரு பாட்டு, சிவகௌரி வேலாயுதபிள்ளை பாட்டு.

### சாதாரண சித்தி

சாந்தினி தம்பித்துரை பாட்டு, சிவரூபி வேலாயுதபிள்ளை பாட்டு, மார்வின் ஜெயந்தி அன்ரனிப்பிள்ளை வயலின்.

### கோப்பாய்

### முதலாம் பிரிவு

0 தவதேவி கணேசரத்தினம் பாட்டு, கல்யாணி கனகரத்தினம் பாட்டு, 0 சந்திரமலர் செல்வராஜா பாட்டு, 0f யோகேஸ்வரி கார்த்திகேசு பாட்டு.

### இரண்டாம் பிரிவு

ஸ்ரீ ஜெனனனி முருகேசபிள்ளை வயலின், 0 மசிலா செல்வராசா வீணை, சிவாஜினி கந்தையா பாட்டு, 0 யமுனா வேலாயுதபிள்ளை பாட்டு 0 ஸ்ரீ தமயந்தி இராமநாதன் பாட்டு, 0 சுமதி சேனாதிராசா பாட்டு, 0 ஷைலா வல்லிபுரம் பாட்டு, 0 ஜெயகுமாரிகாமாட்சிசுந்தரக்குருக்கள் பாட்டு, சுதர்சினி பொன்னையாபாட்டு, லோஜினி சிவஞானசுந்தரம் பாட்டு, நாமகள் பாலசுப்பிரமணியம் பாட்டு, சாந்தகுமாரி செல்வராஜா பாட்டு, f குமுதினி ஸ்ரீபத்மநாதன் பாட்டு, 0 சுமதி செல்வநாயகம்பாட்டு, உமா விக்கினேஸ்வரன் பாட்டு.

### சாதாரண சித்தி

அமுதகௌரி இராசலிங்கம் வீணை, உமையாள் சோதிநாதன் பாட்டு, சௌதாமினி குகதாசக்குருக்கள் வயலின், திலோத்தமா கனகலிங்கப் பாட்டு, லோசனா கர்தசாமி ஐயர் பாட்டு, அனுசூயா நடராஜா பாட்டு, ஷண்முகப்பிரியா குகதாசக்குருக்கள் பாட்டு, சுபோதினி பூபாலசிங்கம் பாட்டு, தேவதா இரத்தினவேல் பாட்டு, திருமகள் கணேசமூர்த்தி பாட்டு, மஞ்சுவாணி சொக்கலிங்கம் பாட்டு, பகிரதி மகாதேவா பாட்டு, எமல்டா சுதர்ஜினி ஸ்ரீரங்கநாதன் பாட்டு, பாமா விக்கினேஸ்வரன் பாட்டு, கஜனி சிவஞானசுந்தரம் பாட்டு, பிரியதர்சினி செல்லத்துரை பாட்டு.

### மூன்றும் பகுதி

### தெல்லிப்பழை

### முதலாம் பிரிவு

0 ராஜீவீ இராமலிங்க ஐயர் வீணை, 0 வாசுகி கனகமாணிக்கம் பாட்டு, 0 கேசாரிணி சிவபாதம் பாட்டு, விஜயலட்சுமி இராமலிங்க ஐயர் பாட்டு, 0 சிவகலை சிவப்பிரகாசபிள்ளை பாட்டு, வயலின், 0 சியாமளா சிவானந்தன் பாட்டு வயலின், 0 கமலினி கதிரவேலு பாட்டு, வீணை, 0 தேன்மொழி குமாரசுந்தரம் வீணை, 0 அமிர்தகலை பொன்னம்பலம் பாட்டு, 0 துஷ்யந்தன் சிவசம்புபாட்டு.

### இரண்டாம் பிரிவு

துளசி அரியரத்தினம் பாட்டு, 0 ஹம்ஸத்வனி கணேஸரத்தின சர்மா பாட்டு, 0 நித்திலா பத்மநாதன் வீணை, 0 கிருபா சின்னத்துரைபாட்டு, 0 பேள் லோகநாயகி போல் வயலின், 0 மைதிலி சிவபாதசுந்தரம் பாட்டு, 0 தர்சினி தேவதாசன் பாட்டு, 0 மஞ்சுளா பாலசிங்கம் பாட்டு, 0 யாழினி சனகமாணிக்கம் பாட்டு, சுகந்தி கந்தையா பாட்டு.

0 சாஸ்திரப் பரீட்சையில் விஷேச சித்தி.

f செய்முறைப் பயிற்சியில் விஷேச சித்தி.


## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1983

## மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 13-9-82ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 4476

## 100 % வரிச் சலுகை

நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உங்கள் பங்குகளுக்கு எதுவித வரியும் கிடையாது எங்களுடன் சேர்ந்து அதிகவட்டியையும் லாபத்தையும் பெறலாம்.

| | | வட்டி மாதாந்தம் | முதிர்ச்சி | லாபத்தில் பங்கு |
|---|---|---|---|---|
| 1 வருடம் | 1000/- | 24% | 26% | 2% |
| | 5000/- | 25% | 27% | 2% |
| | 25,000/- | 26% | 28% | 2% |
| 2 வருடம் | 1000/- — 25,000/- | 27% | 29% | 2% |
| | 25 000/- மேல் | 28% | 30% | 2% |

விபரங்களுக்கு:-

முகாமையாளர்,
JAFFNA PROPERTY TRADES LTD,
3, நவீனசந்தை மேல்மாடி)
யாழ்ப்பாணம்.


## 57 பேர் மரணம்

திருவனந்தபுரம் செ. 5

கேரளாவில் கொச்சின்என்ற இடத்தக்கருகில்விஷ சாராயம் அருந்தி மரணமானவர்களின் தொகை 57 ஆக அதிகரித்துள்ளது.

கேரள மாநில முதலமைச்சர் திரு கருணாகரன் இம் மரணங்கள் தொடர்பாக நீதி விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படவிருப்பதை நேற்றைய தினம் உத்தியோக பூர்வமாக அறிவித்தார். [கி]

## களவாடப்பட்ட நீர் இறைக்கும் யந்திரம்

(மன்னர்)

மன்னர் பெரியமடு கிராமத்தைச் சேர்ந்த தோட்டம் ஒன்றில் களவாடப்பட்ட 4 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பரப்புக் கடந்தான் கிராமத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்டது.

இத்தண்ணீர் இறைக்கும் இயந்திரம் முன்பு களவாடப்பட்டதாக மன்னர் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இப்புகார் தொடர்பாக பொலிசார் விசாரணையிலீடுபட்டபோதே கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை அவர்கள் கைப்பற்றினர்.

முகமாலையில்

## மாணவர் முதல் நன்மைப் பாசறை

(கிளிநொச்சி)

த்தோலிக்க மறைஆசிரியர் சங்க கிளிநொச்சிக் கிளையினர் முகமாலை 'பேற்றன்' இல்லத்தில் மாணவர் முதன் நன்மைப் பாசறையைக் கிளிநொச்சிப் பங்குத்தந்தை வண பிதா பயஸ் அடிகளாரின் வழி நடத்தலில் நடத்தினர். 85 மாணவர்கள் இப்பசறையில் பங்கேற்றனர். மேறபடி கிளையின் தலைவரும் கனகாம்பிகைக் குளம் வித்தியாசாலை அதிபருமான திரு. பொன். தில்லைநாயகம், செயலாளர் திருமதி இரா. மயில்வாகனம் ஆகியோர் இப்பாசறைக்குப் பொறுப்பாக இருந்தனர்.

பரந்தன். உருத்திரபுரம் பங்குகளின் குரவர்களும், புனித திரேசா மடம், புனித பற்றிமா மடம் ஆகியவற்றின் அருட்சகோதரிகளும் அருட்சகோதரர் பற்றிக் அடிகளாரும் பலஆசிரியர்களும் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

## மண்டைதீவில் பனம் பொருள். பயிற்சி நிலையம்

[யாழ்ப்பாணம்]

பனம்பொருள் அபிவிருத்தி சபை, மண்டைதீவுக்கிராம பனம் பொருள் பயிற்சியாளர்களுக்கான பனம் பொருள் உற்பத்தியை இம் மாதம் 1ம் திகதி புதன்கிழமை ஆரம்பித்தது.

இங்கு பயிற்சி பெறும் 24 பெண்கள் இந்த உற்பத்தியில் கலந்து கொண்டனர்.

மண்டைதீவுக் கிராமோதய சபையின் ஆதரவில் நடைபெற்றுவரும் இந்த உற்பத்தி பயிற்சி நிலையம் யாழ், மாவட்டசபையின் மண்டைதீவு உப அலுவலக மண்டபத்தில் இயங்கிவருகிறது. [வண்-நி]

# அமெரிக்க சமாதானத் திட்டம்:

# எகிப்து, ஜோர்தான் வரவேற்பு!

## பெய்ரூட் தென்பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ்

கெய்ரோ செப். 5

மத்தியகிழக்கு சமாதானம் தொடர்பாக அமெரிக்கா தெரிவித்த சமாதானத்திட்டத்தை எகிப்து, ஜோர்தான் ஆகியன மிகுந்த அவதானத்துடன் வரவேற்றுள்ளன.

எகிப்திய வெளிநாட்டமைச்சர் ஜனுப் கமல் ஹசன் அலி இத்திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் மிகுந்த உத்வேகம் உடையதொன்று என்று தெரிவித்தார்.

அமெரிக்காப் பாதுகாப்பு அமைச்சர் திரு. கஸ்பார் வெயின் பேக்கர், எகிப்திய அதிபர் ஜனப் ஹொஸ்னி முபராக்குடனும் அமெரிக்காவின் சமாதானத்திட்டம் பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

அமெரிக்கா இப்புதிய திட்டத்தின் அடிப்படையில் 1973ம் ஆண்டில் தெரிவித்த சமாதானத்திட்டத்தை எகிப்துசிரியா ஆகியனமுற்ருக நிராகரித்திருந்தன. இதற்கு அவ்வேளை இவை இஸ்ரேலுடன் கடுப்பகை கொண்டிருந்ததே காரணமாகும்.

அமெரிக்கா தெரிவித்துள்ள மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தின் உள்ளடக்கமானது, காஸா பள்ளத்தாக்கிலும், ஜோர்தானின் மேற்குக்கரைப்பகுதியிலும் பாலஸ்தீனர்களுக்கு தனிநாட்டை அமைத்துக்கொடுப்பதாகும்.

இது இவ்வாறிருக்க பெய்ரூட்டின் தென்பகுதியில் நிலைகொண்டிருந்த இஸ்ரேலிய இராணுவ அணிகள் சில தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனவென்று தெரிவிக்கப்பட்டது. இந்த அணிகள்பெய்ரூட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள குவைத் தூதரகத்தை அடுத்த பிரதேசங்களிலேயே இருந்துவந்தன (கி)

## வெளிச்சமிருந்தும் கிளிநொச்சி நகர்...

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரம் வெளிச்சம் இருந்தும் இருளாகக் காட்சிதருகிறது. மின்கம்பங்களில் மிகவும் சக்தி குறைந்த பல்புகள் பொருத்தப்பட்டிருப்பதும் மின்சார கம்பங்களின் இடைவெளி அதிகமாக உள்ளதுமே இதற்குக் காரணமாகும். மக்கள் அதிகம் கூடும் பஸ் நிலையம், சந்தை, நகர மண்டபம், பழைய பஸ்நிலையம், கரடிப்போக்குச் சந்தி போன்ற இடங்களில் கூட போதிய வெளிச்சமின்றியிருப்தால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். [அ]

## கிராமோதயசபை சிரமதானம்

(இலுப்பைக்கடவை)

இலுப்பைக்கடவைக் கிராமோதய சபையின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் மாதத்தில் ஒருநாள் சிரமதானப் பணியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைக் கிராமோதய சபைத்தலைவர் திரு. சி. சண்முகலிங்கம் மேற்கொண்டிருக்கிறார்.

கிராமோதய சபைத் தலைவரும் உறுப்பினர்களும் அவ்வக் கிராமத்திலுள்ள தொண்டர்களை ஒன்றுசேர்த்து இப்

(6-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் இந்திரா 20-ல் சோவியத் பயணம்

புதுடில்லி, செப்.5

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இம்மாதம் 20ம் திகதி சோவியத்யூனியனுக்கு உத்தியோபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவிருக்கின்ருர்

இவ் விஜயம் ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு சோவியத்தில் இடம்பெறவிருக்கின்றது என்று இந்திய வெளிவிவகாரப்பகுதியினர் தெரிவித்தனர்.

இந்திய வெளிநாட்டமைச் திரு. நரசிம்மராவ் இம்மாதம் 14ம் திகதி மாஸ்கோ பயணமாவார். இவர் அங்கு 15ம், 16ம் திகதிகளில் நடைபெறவுள்ள பாரத—சோவியத் கூட்டுக்கமிஷனின் கூட்டங்களில் பங்குபற்றுவார்.

பிரதமர் இந்திரா காந்தியின் சோவியத் விஜயத்துக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொருட்டு இந்திய அதிகாரிகள் குழுவொன்று இம்மாதம் 12ந் திகதி சோவியத் பயணமாகும்,

பிரதமர் திருமதி காந்திக்கு சோவியத்யூனியன் முக்கிய மாநிலங்கள் பலவற்றில் பெரும் வரவேற்பு வழங்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## பெரியகுளம் தேர்தல் 25 பேர் போட்டி

சென்னை, செப். 4

பெரியகுளம் லோகசடா இடைத்தேர்தலில் 25 பேர் மட்டுமே போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் போட்டியிட 43 பேர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் 15 போ தமது வேட்புமனுக்களை விலக்கிக் கொண்டுள்ளனர். 3 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. [வெ]

# பத்திரிகையாளருக்குஎதிரான பீகார்மாநில சட்டமூலத்துக்கு நாடளாவியஎதிர்ப்பியக்கம்!

சென்னை, செப் 5

பீகார் மாநிலத்தில் பத்திரிகையாளர்களைப் பாதிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட சட்ட மூலத்துக்கு இந்தியாவில் நாடளாவிய எதிர்ப்பியக்கத்தை நடத்த இந்தியப் பத்திரிகையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி பீகார் மாநில அரசின் இந்த சட்ட மூலத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். இதனையடுத்தே நிலைமைகள் மோசமாகும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பீகார் சட்டமூலத்துக்கெதிராக இந்தியா முழுவதிலும் பத்திரிகையாளர்கள் பகிஷ்கரிப்பு நடத்தியமை தெரிந்ததே. இத்தினத்தில் இந்திய அரசாங்கப் பத்திரிகையான 'நெஷனல் ஹெரால்ட்'டைத் தவிர ஏனைய பத்திரிகைகள் யாவும் வெளிவரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது (கி)

## வட இந்தியாவில் வெள்ளம்:

# "இந்த நூற்றண்டின் மோசமான வெள்ளப்பெருக்கு"

புதுடில்லி, செப். 5

வட இந்தியாவில் ஒரிஸ்ஸா, பீகார், உத்தரப்பிரதேஷ் ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தற்போது ஓரளவு தணிந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சர் திரு. பட்னுயக் ''இந்த நூற்றண்டிலேயே ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கு'' என்று இம்முறை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைக் குறிப்பிட்டுள்ளார்.

மகாநதியின் பெருக்கே ஒரிஸ்ஸாவில் பெரும் அழிவை ஏற்படுத்தியிருந்தது. ஆகையினுல் இந்த நதிக்குஏற்கனவேயுள்ள மணிபத்ர என்ற அணைக்கருகில் இன்னுமொரு பெரும் அணை கட்டப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பீகாரில் வெள்ள நீரின் அளவு குறைவடைந்துவருகின்றது. ஆயினும் சில இடங்களில் தொடர்ந்தும்நீர்மட்டம்குறைவடையாதுள்ளது. 90 சதுர கிலோமீட்டர் நிலப்பகுதியில் நீர்தேங்கிநிற்கின்றது.

ஹெலிகாப்டர் விமானங்களில் சென்று நிவாரணப்பணிகளில் ஈடுபடுவோர் நூற்றுக்கணக்கான வீட்டுக் கூரைகள் நீரில் மிதந்து செல்வதனைத் தம்மால் காணமுடிந்ததுஎன்று தெரிவித்தனர்.

இராணுவ வள்ளங்கள் பல நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. வானத்திலிருந்து உணவுப் பொட்டலங்களைப் போடும் பணியும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. [கி]

## மாந்தைப்பிரிவு பிரதேசசபை கோரிக்கை

(இலுப்பைக்கடவை)

மன்னூர்ப் பகுதியில் தொடர்ந்து இரண்டு வருடங்களாக ஏற்பட்ட வரட்சியின் கொடுமையினுல் இப்பகுதி விவசாயிகள் விதைநெல்லின்றி வேதனைப்படுகின்ருர்கள். இவர்களுக்குத் தேவையான விதை நெல்லை இலவசமாக வழங்க அரசினர் நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.''

இவ்வாறு மாந்தைப்பிரிவுப் பிரதேச சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்குப் பிரதேச சபைத்தலைவர் திரு. சீ. சவுந்தரநாயகம் தலைமை வகித்தார்.

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 21-ம் திகதி

திங்கட்கிழமை

(6—9—82)

மேடம்: பேச்சு வன்மையால் பெரும் புகழ் சேரும். பெரியோர்கள் ஆசியும் கூறுவர். அரசியல் வாதிகள் அதிக செல்வாக்கையும் பெறுவார்கள். பொன்னுன தினம்.

இடபம்; இருள் மண்டிக் கிடக்கும். இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்திலும் உடல்நலம் பாதிக்கப்படலாம். ஆணவப்போக்கை தவிர்த்துக் கொள்ளவும்.

மிதுனம்: தங்கள்திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள். நீண்டகாலப் பயனளிக்கக்கூடிய பொருள் ஒன்றும் உங்களுக்குக் கிடைக்கலாம்.

கடகம்: அதிர்ஷ்டமான தினம். சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கும் இடமுண்டு. மனைவாழ்வில்மகிழ்ச்சி தென்படும். வீட்டில் சுபகாரியம் ஒன்றும் இடம்பெறும்.

சிங்கம்: பக்கத்தில் படுகுழி தோன்றுவதற்குப் பகைவர்கள் காத்திருப்பர். முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும். ஆயுத பீடைக்குக்கும் இடமுண்டு.

கன்னி: தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும், குடும்பத்தில் தென்றல் வீசும். சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். அறிஞர்கட்கு இன்று சுவையான தினம்.

துலாம்: எண்ணியதில்தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்கள் காலைவாரிவிடவும் கூடும். நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: எதிர்பாராத திருப்பங்கள் இன்று வாழ்க்கையில் புதிய மாற்றங்களையும் உருவாக்கும். பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், கண்ணியமான தினம்.

தனு: வியாபரத் துறையிலும் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்புண்டு. வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும். பதவியில் உயர்வும் உண்டு.

மகரம்: உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீது பதியும். எதிர்பாராதஅதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு.

கும்பம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்துகுந்தும் ஏமாற்றம் தாக்கும். சிந்தையான போக்கும் நடவடிக்கையும் காட்டும்.

மீனம்: இனப்பூசலின் மூலம் இதய பாரம் ஏற்படும். திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள், எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமை சமாளிக்க முடியும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

# பங்களாதேஷ் முன்னுள் அமைச்சர்களுக்குச் சிறை!

டாக்கா, செப். 5

பங்களாதேஷின் முன்னுள் அமைச்சர்கள் இருவருக்கும், பிரபல வர்த்தகர்கள் இருவருக்கும் பங்களாதேஷ் இராணுவ நீதிமன்றம், சிறைத் தண்டனைகளை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

இத்தண்டனைகளுக்குள்ளான அமைச்சர்களில் ஒருவருக்கு 14 வருடச் சிறைத்தண்டனையும், மற்றயவருக்கு 5 வருடச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஒல்லாந்து விமானச் சேவைக் கம்பனியொன்றிடம் அதன் விமானச்சேவையைப் பங்களாதேஷில் நடத்த அனுமதிப்பதற்காக 1 லட்சத்து 50 ஆயிரம் டாலர்களை லஞ்சமாகப் பெற்றுர் என்றே 14 வருட சிறைத் தண்டனைக்குள்ளான அமைச்சர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. மற்றைய அமைச்சர் மீதும் வர்த்தகர்கள் இருவர் மீதும் இவருக்கு உடந்தையாக இருந்ததாகவே குற்றஞ் சாட்டப்பட்டது. [கி]

## மணிவாக்கு

உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுவானேன்? வயல் வெளியிலுள்ள லில்லிப் புஷ்பங்கள் எப்படி வளருகின்றனவென்று கருதிப் பாருங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. — பைபிள்.

# நமது நோக்கு

## கட்டுக் கோப்பைக் குலைத்து விடாதீர்!

பல்லாண்டுகளாகப் பல்வேறு மந்திரங்களால் பொதுமக்களை மயக்கிவந்த தமிழ் அரசியல் வாதிகள் தாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த அரசியல் பாபத்தின் சம்பளத்தைப் பெற்றே தீரவேண்டும்

அது ஒருபுறமிருக்க, சுதந்திர இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சிகள் திட்டமிட்ட போக்கில், தமிழ்மக்களை ஆதாரமற்ற சிறுபான்மையினரென ஒதுக்கிவருவது இன்று ஒவ்வொரு தமிழனுக்கும் தெரிகின்றது.

இந்த நிலைக்கு தமிழ்த் தலைவர்கள் என்று தம்மைச் சொல்லி கொண்டவர்களும் ஆளுங்கட்சிகளில் தேசியம் கண்டுபிடித்தவர்களும் பெரிதும் உதவியிருக்கின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு தீவிரவாதத்தைத் தோற்றுவித்து அரசியலில் தலைமைப் பீடத்தைப் பிடிப்பதும் ஒரு கைதேர்ந்த சம்பிரதாயமாகிவிட்டது.

இவர்களெல்லாம் ஒருஅச்சாறுபோன்று வெவ்வேறு கட்சிகளாயும், ஒரு கட்சியில் வேறுபிரிவுகளாவும், உயிர்த்துடிப்புள்ளவர்கள் செத்த பாம்புகள்பழையபல்லவிகள் குறை உயிரில் கொட்டாவி விடுபவர்கள் இந்தக் குடா நாட்டிலேயே 'கச்சேரி' வைப்பதென்றால், அது சங்கீத கச்சேரியல்ல; சுண்டிக் குழியில் செயற்படும் 'கச்சேரி' அல்லது வேம்படியில் காணும் 'கோடு' என்றே சொல்லவேண்டும். அர்த்தமற்ற அமளி துமளி!

கடந்த மாவட்ட அபிவிருத்தி தேர்தல் முன்பும், பின்பும் நடைபெற்ற பல துன்பச் செயல்கள், அபிப்பிராய பேதமுள்ள மக்களை பெருமளவிற்கு ஒருங்கு சேர்த்தன.

இலங்கைச் சரித்திரத்திலே வடபகுதி மக்கள் ஒரு அரிய சாதனையை நிலைநாட்டினர்; தோல்வியடைந்த தமிழ் கட்சிகள் தாமும் பெருமைப் படக்கூடியவிடயம் அது.

இந்த ஒற்றுமைக்கு அடிப்படையானது தமிழ்த்தேசியமென்ற ஒரு தனித்துவப் பயிர். பலத்த பகைமைச் சூழ்நிலையில் வளர்ந்துவந்த பயிர் இது. பல தவறுகளையும், கோணல் வழிகளையும் தாண்டி வறட்சிக் காலத்திலும் வாடாதநிலையில் உயிர் வாழுகின்றது.

கடந்த மாவட்ட சபைத் தேர்தல் இப் பயிரின் பலத்தை நிரூபித்தது. இன்றுவரும் ஜனாதிபதித்தேர்தல் இதனைக் கொல்ல எத்தனை விதமான கிருமிகளைக் கொண்டுவந்திருக்கிறது.

இருப்பினும் கிருமிநாசினியிருக்கு ஆபத்தானது. கையாலே நுள்ளிவிட்டுகளை பிடுங்கி, நேரடிக் கவனம் செலுத்தவேண்டிய கட்டம் இது.

தீவிரவாதம் அதுவும் தாரநியூயோர்க்கிலிருந்து பக்ஷ்கர்யென்றும்; பிடிவாதம் பொதுஜனவாக்கெடுப்பென்றும், இன்னொருகும்பல் தமிழ் ஜனாதிபதியென்றும், இவை எல்லாவற்றிக்கும் மேலாக மிதவாதம் 'கொஞ்சம் பொறு' ''ஹெமிங் ஹெமிங்'' என்றும் பல கோஷ்டிகளாகக் கூத்தாடுகின்றனர். இடதுசாரிகள் ஒற்றுமைப்பட்ட எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஆள் சேர்க்கின்றனர்.

தமிழ் மக்கள் விடுதலை இவ்வித கூத்தாட்டத்தால் கைகூடுமென எவரும் நம்பமாட்டார். நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு வேட்டை! அந்த நிலை என்றும் இருந்துதான்வருகிறது.

தமிழ் மக்களின் விடுதலை இயக்கம் நெய்யாகத் திரண்டபடில்லை. பால் புளித்து நயிராகும் வேளையில் மத்தெங்கே? என்று தேடும் கட்டம்.

மத்தை ஒளித்து விடத் திட்டங்களுக்கு குறைவில்லை தமிழ் மக்கள் விடுதலை எங்களாலேயே ஆக வேண்டுமென்று நினைக்கும் ஆங்காரங் கொண்ட அரசியல் பதர்களும்; எனது மூக்கு அரிபட்டாலும் எதிரிக்கு சகுனப் பிழையாயிருக்கட்டும் என்ற மனப்பாங்குடைய பொதுஜன விரோதிகளும் தங்கள் கடைகளை தற்காலிகமாகவேனும் பூட்டி கொள்ளட்டும்.

கால் நூற்றாண்டு பயணம் விடுதலை ஒளியை எட்டத்திலாவது காட்டி வைத்தது. விடுதலைக்கு என்றும் வேண்டிய விழிப்புணர்வும் மனத்தூய்மையும் தளராத மன உறுதியும் எந்தக் கட்டத்திலும் நெகிழக் கூடிய பண்புகள் அல்ல.

தமிழர் விடுதலை, தமிழ்த் தேசியம் எந்தவிதமான கபடத்துக்கும் குறுக்கு வழிக்கும் இடமளிக்காத பரந்த நோக்குகள்!

பண்டைய வரலாற்றை நன்கு படித்து, தவறுகளைத் தவிர்த்து இதய சுத்தியுடன் நடந்துகொள்ளவும், மக்களை ஒருவழிப்படுத்தவும் தலைவர்கள் ஒன்றுபடுவது அவசியம்.

கலவரங்களால் கடுஞ்சேதம் ஏற்பட்டது மெய். அதே சமயம் மனம் உறுதியடைந்ததும் மெய்; விடுதலைக்கு வேண்டப்படுவது இரண்டாவது பண்டம்; இந்த நாட்டில் தமிழ் மக்கள் மற்றவர்களைப் போல சரிசமனாக வாழும் நிலையே விடுதலை; அது பிரசாரத்தால் வராது; பேச்சுவார்த்தையால் வருமா? வந்தால் பேரதிர்ஷ்டமல்லவா? அது தவறின் தொடர்ந்து போராட வேண்டிய நிலை தவிர்க்கமுடியாததொன்று.

இன்று நிலவ வேண்டிய ஒற்றுமைக்கு எவ்வித பங்கமும் விளையாதாகின் ஜனாதிபதி தேர்தல் தமிழ் மக்கள் விடுதலைப் பயணத்தின் ஒரு முக்கிய மைல் கல்லாயமையும்.

எனவே கைவசம் இருக்கும் கட்டுக்கோப்பைக் குலைத்து விடாதீர்! பிணக்குகளைக் கைவிட்டு எதிர்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி காரியம் கைகூடும் வாய்ப்பு வழங்கக் கூடிய வேட்பாளரைக்கண்டு பிடிப்பதில் வெற்றி காண்பீர்!

## இலங்கை நிபுணர் மோகனதாஸ் திட்டம்: உலகஉணவுவிவசாயநிறுவனம்அங்கீகாரம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

உலக உணவு விவசாய நிறுவனம் இலங்கை நிபுணரான டாக்டர் எஸ். மோகனதாஸின் விவசாயக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி எரிபொருள் சக்தியைப்பெறும் முயற்சித் தொழிற்பாட்டை அங்கீகரித்துள்ளது

டாக்டர் மோகனதாஸ் இலங்கை தென்னை ஆராய்ச்சி சபையின் ஆய்வு அதிகாரியாகவும் இலங்கை பனம் பொருள் அபிவிருத்தி சபையின் ஆலோசக பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு விவசாய நிறுவனத்தின் அழைப்பை ஏற்று பிலிப்பைன்ஸ், சீனு ஆகிய நாடுகளில் நடைபெற்ற ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பங்கு கொண்டு இலங்கை திரும்பியுள்ளார். அவரை நான் சில தினங்களுக்குமுன்னர் சந்தித்தபோது குறிப்பிட்டதாவது:

''நெல் குற்றும் ஆலையொன்றில் உமியை சேதனப்பொருளாகக் கருதலாம். இந்த உமியைக்கொண்டு நெற் குற்றும் ஆலையை இயங்கச்செய்வது தான் எமது திட்டமாகும். தென்னந்தும்பு தயாரிக்கும் ஆலைக்குத் தேவையான சக்தியை, தென்னந்தும்திலிருந்து சேதனமாக வரும் தும்பு, தூசிகளைக் கொண்டே பெற்று இயக்கப்படுகிறது.

'தென்னந் தூசியை உடனடியாக இலகுவில் எரிக்கமுடியாது. ஆதலால் தூசியுடன் சிரட்டைக் கரியையும் சேர்த்தால் அது எரியக்கூடியதாக மாறும், ஆனல் இரண்டுவிதமாக நாம் இதனை மேற்கொள்ளமுடியும். உமியையோ அல்லது தென்னந் தூசியை தேங்காய்ச்சிரட்டைக்கரியுடன் நேரடியாக எரித்துச்சக்தியைப் பெறலாம். அல்லது இந்தப் பொருட்களை விறகு போல் கட்டியாக்கி அதனைப் பின்னர் எரித்து சக்தியைப் பெறலாம். இக்கட்டியான பொருட்களைச் சாதாரண வாழ்க்கையில் மக்கள் விறகுக்குப் பதிலாக வீடுகளிலும், பெரிய தொழிற்சாலைகளிலும் பாவிக்கலாம். தற்போது விறகுடன் இதன் விலையும்போட்டி போடுகின்றது. ஆகவே விறகிலும் பார்க்க மலிவாக விற்று இந்த எரிபொருளுக்குச் சந்தைப்படுத்தலை ஏற்படுத்தலாம்.

''இந்த எரிபொருளை எரிக்கும்போதுபோதியளவு பிராண வாயு கழிக்கப்படமாட்டாது. அப்போது காபனேரொட்சைட் (Co) நைதரசன் ஒக்சைட் (No) போன்ற வாயுக்கள் உண்டாகின்றன. இந்த வாயுக்களைத் துப்புரவு செய்து ஒரு குழாய் மூலம் ஒரு டீசல் எஞ்சினுக்கு அனுப்பப்படும். இதற்கு முன்னர் ஒட்சிசன் (O2) தேவையான அளவு சேர்க்கப்படும். இப்படிச் சேர்ப்பதனுல் இவ்வாயுக்கள் எரிந்து டீசல் எஞ்சினுக்குப் போதிய சக்தியை வழங்குகின்றது. டீசல் எஞ்சின் இயங்குகின்றது. இந்த இயக்க சக்தியால் ஆலைகளையும், சாலைகளையும் இயக்கமுடியும். சகலமின் சாரத் தேவைகளையும் இச்சக்தியிலிருந்து பெறலாம். இந்த எரி சக்தியினுல் ஒரு கிராமத்திற்கே மின்சாரம் வழங்கக் கூடியதாக இருக்கும்.

''பிலிப்பைன்ஸ், சீனு ஆகிய நாடுகளில் ஆங்காங்கே கிடைக்கப்பெற்ற சேதனப் பொருட்களை ஒரு குழு பெற்று ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. சீனுவில் உமியைப் பயன்படுத்தி ஒரு நெல் குற்றும் ஆலையை இயங்கச் செய்வதற்கு வழி வகுத்தனர். இலங்கையிலும் இத்தகைய ஆராய்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன, இதனுல் எம்நாடு பெரும் பயனடையக்கூடிய வாய்ப்புண்டு. இலங்கை புகையிலைக் கம்பனியினர் தென்னந்துப் புத்தூசியிலிருந்து இந்த எரி சக்தியை உற்பத்தி செய்து வருகின்றனர்''

## நல்லை சைவசித்தாந்த வகுப்பு: ஒரு வேண்டுகோள்

நல்லூர் நாவலர் நிலைய மணிமண்டபத்தில் வாரத்திற்கு ஒருநாள் சனிக்கிழமைகளில் காலை 9 மணியிலிருந்து 12 மணிவரை சைவ சித்தாந்த வகுப்பு நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் வருகை தருபவர் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. குறிப்பாக, சைவ சித்தாந்த வகுப்பில் பங்கு கொள்ள வருபவர்களில் பெரும்பாலோர் புதியவர்களாகவும், கொழும்பில் உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணத்தில் தங்கள் வாழ்க்கையைத் தொடர்பவர்களாயுமுள்ளவர்களே.

நடைபெற வேண்டுமென்ற நன்நோக்கு வகுப்பில் பங்கு கொள்ள விழைபவர்களுக்குத் தெற்றெனப் புலனுகும்.

ஆதலினுல்-சைவசமயத்தின் கருப்பொருளை அறிவான் வேண்டி அவாவுற்று—சைவ சித்தாந்த வகுப்பில் பங்கு கொள்ளும் அனைவரும் தயவு செய்து சனிக்கிழமை காலை 9 மணிக்கே நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் உங்கள் வருகையை முன்னிட்டுப் போடப்பட்ட கம்பளத்தில் வந்து அமரவேண்டுமென ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை பணிவன்புடன்கேட்டுக் கொள்ளுகிறது.

துணைச் செயலாளர்

க. இளையதம்பி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை
நல்லூர் நாவலர் நிலையம்
நிர்வாக உபகுழு.

## மக்கள் கருத்து

யாழ்ப்பாணச் சுற்றுடலில் வதிபவர்களில் கணிசமான அளவு பேர்கள் — அதாவது இவ்வகுப்பில் பங்குகொள்ள வருபவர்கள்—இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் பயின்று ஆசிரியர்களாய்ப் பணி புரிபவர்களும் ஓய்வுபெற்றவர்களுமாவர்.

இவர்கள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்திற்கு வருகை தரும்பொழுது 10 மணி ஆகி விடுகிறது. பாடத்தை 9 மணிக்கே தொடங்கி விடுவதால் சில அருமையான விடயங்களைச் செவிமடுக்க முடியாது தவறி விடுவதாகவும், எனவே 10 மணிக்கே வகுப்பை ஆரம்பிக்குமாறும் கோரிக்கை விட்டுக் கடிதங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

இந்நிலையில் சைவசித்தாந்த வகுப்பில் பங்குகொள்ள அவாவுற்று நிற்கும் சைவ சமய அன்பர்கள் வகுப்பை நடாத்தும் ஆசிரியர், சமஸ்கிருதபண்டிதர், சைவப்புலவர் திரு. மு. கந்தையா மெய்வருத்தம் பாராமல் ஏழாலையில் இருந்து காலை 8 மணிக்கே நல்லூர் நாவலர் மணிமண்டபத்திற்கு வந்து மாணவரின் வருகையை எதிர்பார்த்து நிற்கும் நிலைமையைச் சற்று மனதிற்கொள்ளவேண்டும்.

ஆசிரியரது சைவ சமயப் பணி எவ்வாறு முட்டின்றி

## அருள்புரிவாய் விநாயகனே

[பூநகரி, பொன்னுவெளி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று நிகழ்கின்றது.]

மலர்ப்பதத்தை மனத்திருத்தி மலர்தூவிப் பணிகின்ற
நலமறியா தெங்களுக்கு நலமருள்வாய் மலைமகளின்
திருமகனே! பிரணவனே! நிர்மலனே! சற்குணனே!
திருமுருகன் சோதரனே போற்றி!

கறவையினம் புல்மேய்ந்து கன்றெண்ணிப் பால்சொரியும்!
பறவையினம் கதிரெடுக்கும் வயல்களிலே உறக்கமின்றி
அலையெறியும் கடல்சூழும் பொன்னு வெளிப்பதியில்
நிலைகொள்ளும் ஐங்கரனே போற்றி!

வேலவனின் முன்னவனே! வேழமுக விநாயகனே!
மாலவனின் மருகோனே! கணபதியே! காலமென
உமாபதியை வலம்வந்து கனிவென்ற கணநாதா!
எமையென்றும் காப்பாய் நயந்து!

கல்லாமை இல்லாமை பெய்யாமை கலைந்தென்றும்
நல்லாண்மை வளர்ந்தோங்க அருள்தாராய் பொல்லாமை
இல்லாமை வேண்டும்! வெள்ளாண்மை மிகவேண்டும்!
நல்லானை முகத்தரசே போற்றி!

நன்னெஞ்சக் கோயில்கள் நின்றனுக்குப் போதாது
என்றெழி சேர் கற்கோயில் எடுப்பித்தோம் மின்னனைய
மருட்பதனைத் தரித்தவனே! வெண்ணிலவைச்
சபித்தவனே!
விருப்புடனே வந்திங் கருள்!

''முருகு''

# மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க சமாதானசபை வேண்டும்

## கிராமோதயசபை தீர்மானம்

(கரவெட்டி - நிருபர்)

தும்பளை கிராமோதய சபை பகுதிக்குள் வசிக்கும் மக்களுக்கிடையே ஏற்படும் சிறு பிணக்குகள் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க கிராமோதய சமாதானசபை ஒன்றை நியமிக்கவேண்டுமென்று வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகத்தலைவர் திரு. எஸ். திருச்செல்வத்தினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை தும்பளை கிராமோதய சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத்தலைவரும் தும்பளை கிராமோதயசபைத் தலைவருமான திரு. சி. மு. கந்தசாமி தலைமையில் தும்பளை சைவப் பிரகாச மகாவித்தியாலய மண்டபத்தில் இக்கிராமோதயசபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன:-

வல்லிபுரம், வராத்துப்பளை, கற்கோவளப் பகுதிகளில் களவாகக் கடற்கரை மணல் கடத்தப்படுவதனால் இக்கிராமங்களும் முக்கியமாக ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயமும் கடலில் மூழ்கக்கூடிய அபாயகரமான நிலைமைகள் தோன்றியுள்ளதாலும், இக்கடற்கரை மணலில் 85 சதவீத சிலிக்கா இருப்பதனால் கண்ணாடி உற்பத்திக்குச் சிறந்த இயற்கை மூலவளத்தை நாம் இழந்துகொண்டிருப்பதனாலும் இப்பகுதிகளில் களவாக மணல் கடத்தப்படுவதை உடன்தடை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர், யாழ். அரச அதிபர், வட பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பருத்தித்துறை எம். பி, பருத்தித்துறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரைக் கோரவேண்டும்.

பனைமரங்கள் எமக்குக் கிடைத்த கற்பகத்தருவான சிறந்த மூலவளமாகும். பனைகள் தேவையற்ற முறையில் தறிக்கப்படுவதனால் எமக்கு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பெரும் பாதிப்புகளைத் தவிர்த்துக்கொள்வதற்காகத் தேவையற்றமுறையில் பனைமரங்களைத் தறிப்பது தடைசெய்யப்படவேண்டுமென்பது எதிர்க்கட்சித் தலைவர் யாழ்.மாவட்டசபைத் தலைவர், அரச அதிபர், பருத்தித்துறை எம். பி., உதவி அரச அதிபர் ஆகியோரைக்கோரவேண்டும்.

இலங்கைப்பனம் பொருள் அபிவிருத்திச்சபை பனைவள அபிவிருந்திகளை மேம்படுத்துமுகமாக கிராமிய மக்களுக்கு உதவிகளை வழங்கத்தயாராக இருப்பதனால் பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் உதவிகளை இயன்றவரைபெற்று எமது கிராமத்தில் பனம் பொருள் அபிவிருத்திகளைமேம்படுத்த பனம்பொருள் அபிவிருத்திசபைத் தலைவருடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

கற்கோவளப் பாடசாலை தொடக்கம் வராத்துப்பளை வரை வீதி விளக்குகளைப் பொருத்தி அப்பகுதி மக்களுக்கு உதவி வழங்க வேண்டுமென யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பருத்தித்துறை எம். பி, யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உப- அலுவலக நிர்வாக மேற்பார்வையாளர் ஆகியோரைக்கோரவேண்டும்.

எமது இயற்கை வளங்களையும் நிலநீரையும் பாதுகாப்பதற்காகப் பாரிய அளவில் மரம்நாட்டும் இயக்கத்தை மேற்கொள்வது சம்பந்தமாக பருத்தித்துறை எம்.பி., பருத்துறை உதவி அரச அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

எமது கிராம அபிவிருத்தி மேம்பாடு கருதி கிராமமக்களை ஒன்றிணைத்துச் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைளை எடுக்கவேண்டும்.

## தாக்குதல் வழக்கு: 3-ம், 4-ம் எதிரிகள் விடுதலை

[சாவகச்சேரி]

மீசாலை தெற்கைச் சேர்ந்த விநாசித்தம்பி கயிலாயபிள்ளை என்பவரைத் தாக்கிய வழக்கில் 1ம்' 2ம், எதிரிகளாகிய கேதீஸ்வரன், கோடீஸ்வரன் ஆகியோர் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

3ம், 4ம் எதிரிகளாகிய தியாகராசா, பத்மநாதன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

கயிலாயபிள்ளை என்பவரை சயிக்கில்செயினாலும், கொட்டனாலும் தாக்கிப்படுகாய முண்டாக்கியதாக கேதீஸ்வரன், கோடீஸ்வரன், தியாகராசா, பத்மநாதன் என்பவர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும் 3-ம், 4-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும், வழக்காளி சார்பில் சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். தம்பிரத்தினமும் ஆஜரானார்.

விசாரணை முடிவில் நீதிபதி எம் எச். காரியப்பர் 1ம், 2ம் எதிரிகளை செப்டம்பர் மாதம் 14ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு 3ம், 4ம் எதிரிகளை விடுதலை செய்தார்.

## திருமுறை விழா

[சுழிபுரம்]

திருமுறை விழாவொன்றை தொடர்ந்துபன்னிரண்டுதினங்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முறைப்படி திருமுறை வரலாறு வாசித்தல், ஓதுதல், பூசை வழிபாடு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். வழக்கம்பரை அம்மன் கோவிலில் இவ் வைபவம் நடைபெறவுள்ளது. வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினரால் நடத்தப்படவுள்ள இவ் பன்னிரு திருமுறை விழாவில பல திருமுறை கழகங்களும், பஜனைக் கோஷ்டிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## செண்ஜோன்ஸ் படையின் சேவைக்குப் பாராட்டு

(கோண்டாவில்)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி உற்சவ காலத்தின் போது கடமையில் ஈடுபட்டிருந்த செண்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினரின் சேவையை பொதுமக்களும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வேலும் மயிலும், முல்லைத்திவு அரசாங்க அதிபர் கே, ஞானச்சந்திரன் கிராம சேவையாளர்களும் பாராட்டி அவர்களின் குறிப்பு புத்தகத்திலும் எழுதியுள்ளார்கள்,

செல்வச்சந்நிதி ஆலய உற்சவகாலங்களில் இவர்கள் ஆலய சுற்றுடலில் ஒழுங்கையும், பாதுகாப்பையும் நிலைநாட்டியதுடன் வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தனர்.

## சங்காபிஷேகம்

பரந்தன்)

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட சித்திவிநாயகர் ஆலயத்தில் சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## மா. அ. சபை உறுப்பினர் சுகயீனம்

[வேலணை]

யாழ். மாவட்ட அபிவித்தி சபையின் ஊர்காவற்றுறைத் தொகுதி உறுப்பினர் திரு. வே. க. சோமசுந்தரம் சுகயீனம்காரணமாக யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகிறார்.

## இந்திராவின் சோவியத் விஜயம்

புதுடில்லி, செப். 5

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அரச விஜயமொன்றை மேற்கொண்டு இம்மாதம் 20-ம் திகதி சோவியத் யூனியனுக்கு விஜயம்செய்யவுள்ளார்.

இவர் அங்கு ஐந்து நாட்கள் தங்கியிருப்பாரென்றும் கூறப்பட்டது. [வெ]

## இணக்கசபை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிழக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு மு. சிவராசா தலைமையில் இணக்க சபை யொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சுழிபுரம் கிழக்குப் பகுதியில் ஏற்படும் பிணக்குகள், சச்சரவுகளை சமாதான முறையில் தீர்த்து வைப்பதே இச்சபையின் நோக்கமாகும்.

## சிரமதானம்

(துணுக்காய்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேசிய இளைஞர் சேவைமன்றத் தினரால் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரப்படுகின்றது. யோகபுரம் 1-ம் யூனிட் பகுதி தேசிய இளைஞர் மன்ற குழு இந்தசிரமதானப்பணியை செய்து வருகின்றது.

வீதிகள் விளையாட்டு மைதானங்கள், என்பனவற்றை சிரமதான மூலம் செப்பனிட்டு வருகிறார்கள்.

இப்பணியில் சுமார் நூறு இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

இச்சிரமதான பணிக்கு முல்லைத்தீவு மாவட்ட தேசியஇளைஞர் சேவைமன்றத்தினர் வெட்டி, மண்பிக்கான், கோடரி கத்தி, தள்ளுவண்டி போன்றவற்றை இலவசமாக வழங்கி ஊக்குவித்துள்ளனர்.

இச் சிரமதான ஆரம்பவிழாவில் யோகபுரம் கிராமோதய சபைத்தலைவர் திரு. வி வேதநாதன், இளைஞர் சேவைமன்ற தலைவர் திரு ச, தவகுலசிங்கம், இளைஞர் மன்ற தலைவர் திரு, கு. ஆனந்தராசா, யோகபுரம் விசேட சேவை அலுவர் திரு. ப. நவரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வேலைவாய்ப்பு

[துணுக்காய்]

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பை வழங்கும் திட்டத்தின் கீழ் இலங்கை வாலிபர்களை வேலைகளுக்கு அனும்பும் நேர்முகப்பரீட்சை சென்ற வாரம் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் பயனாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை முல்லைத்தீவுமாவட்ட அமைச்சர் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்த நேர்முகப்பரீட்சையில் துணுக்காய், பாண்டியன்குளம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50 வாலிபர்கள் கலந்துகொண்டனர். முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரின் செயலாளர் திரு. எஸ். செல்வரட்ணம் இந்த நேர்முகப் பரீட்சையை நடாத்தினார்.

## மண்டைதீவுகிராமோதயசபை

## வாரக்குத்தகை விவசாயிகள் கஷ்டம் நீக்க யோசனை

(யாழ்ப்பாணம்)

- "வாரக்குத்தகைக்குக் காணி பெற்றுக் கமச் செய்கையில் ஈடுபடும் ஏழை விவசாயிகளிடம் கால் வீத வருமானத்தையே காணிச் சொந்தக்காரர்கள் பெறவேண்டும்" என்று காணிச் சொந்தக்காரர்களைக்கோரும் தீர்மானம் ஒன்றை மண்டைதீவுக் கிராமோதயசபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

சபைத் தலைவர் திரு. இ. நா. இராசலிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் திரு இராசலிங்கம் பேசுகையில், காணிச்சொந்தக்காரர்களை அழைத்து இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றை நடத்தி இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதென்று சொன்னார்.

மண்டைதீவில் நான்கு காசநோயாளர்களும், ஆறு மலேரியா நோயாளர்களுமே இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைசெய்யப்பட்டதென்றும், இக்கிராமத்தில் சுகாதாரம் பேணப்படுவதாகவும், இச்சபையில் சுகாதார நடவடிக்கைகள் பற்றிக்கருத்துத் தெரிவித்த இப்பகுதிச் சுகாதார உத்தியோகத்தர். திரு எஸ். சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். இக்கிரமத்தின் பின் தங்கிய பகுதிகளில் மலசல கூடம் இல்லாத வசிப்பிடங்களுக்கு மலசலகூடம் அமைக்க உதவிப் பணம் வழங்க ஏற்பாடு செய்வதாகவும் அவர் தெரிவித்தார். (வண். நிரு)

## தலைமன்னார் கடலில்

# வெளியூர் மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை?

(மன்னார்)

தலைமன்னார் தென்பகுதிக் கடலில் வெளியூர் மீனவர்கள் வாடிகள் அமைத்து மீன்பிடிப்பது தடைசெய்யப்படும். இதற்கான நடவடிக்கைகள் மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவனுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தலைமன்னார் கிராமோதயசபைக் கூட்டத்தில் உரையாற்றிய கிராமோதய சபைத் தலைவர் திரு. அல்பிரட் சில்வா தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"தற்போது தலைமன்னார் வட பகுதி கடற்கரையோரத்தில் வாடிகள் அமைத்து மீன் பிடித்துவரும் வெளியூர் மீனவர்கள் இம்மாதம் பருவப் பெயர்ச்சிக் காற்று மாறுவதால் தலைமன்னார் தென்பகுதி கடலில் மீன்பிடிப்பதற்காக தலைமன்னார் தென்பகுதி கடலோரத்தில் வாடிகள் அமைத்து மீன்பிடிப்பார்கள்.

தலைமன்னார்தென்பகுதிகடல் கரைவலை மீண்டும் தொழிலுக்கென ஒதுக்கப்பட்டது.

வெளியூர் மீனவர்கள் தலைமன்னார் தென்பகுதி கடலோரத்தில் வாடிகள் அமைக்காது வெளியூர் மீனவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கபுறுவாங்கி பாட்டில் வாடிகள் அமைத்து மீன்பிடிக்கவேண்டும் என்றார்

## சிறந்த கமநலநிலையம் தெரிவு

(துணுக்காய்)

துணுக்காய் கமத்தொழில் சேவை நிலையம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே சிறந்த நிலையமாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இந்நிலையம் மக்களுக்கு அளித்துவரும் சேவைகளைப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. தவராசா விளக்கிக் கூறினார்.

## கருத்தரங்கு

[பரந்தன்]

கிளிநொச்சிப் பிரதேச கிராமோதயசபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் யாழ். அரசாங்க செயலகத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

# "வருவாயை ஈட்டித்தருவோருக்கு அரசு உதவி வழங்கவில்லையே!"

## சீவல்தொழிலாளர் நிலைபற்றி இராஜலிங்கம் எம். பி. கவலை

[புலோலி]

அரசாங்கத்திற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் 80 லட்சம் ரூபா வரியாகச் செலுத்தி வருவாயை ஈட்டிக் கொடுக்கின்ற போதிலும் அரசாங்கம் சீவல் தொழிலாளர்களுக்குக் கடனுதவிகளோ, வேறு எவ்வித சலுகைகளோ வழங்க முன்வராதது வேதனைக்குரியதாகும்; சீவல் தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் சிறப்பாக இயங்கினால் பெரு நன்மையடையமுடியும். சீவல் தொழிலாளர்கள் நிவாரணம் பெறும்போது பொருளாதார முன்னேற்றம்மட்டுமல்ல ஒரு சமூகத்தின் மேம்பாட்டிற்கும் வழிவகுக்கப்படும்.'

இவ்வாறு பருத்தித்தறை–புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 10–வது ஆண்டு நிறைவு விழாவில் மூன்ற இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட புதிய அலுவலகக் கட்டிடத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய உடுப்பிட்டித்தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. கே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு.எஸ். வேலயுதபிள்ளை கூட்டுறவுக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். பொதுமுகாமையளர் திரு. என் கணேசமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்களின் ஆரம்பகர்த்தாவும் பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவருமான திரு. கே. நடராசாவுக்கு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும், பிரஸ்தாப சங்கத்தின் முன்னைநாள் தலைவர் திரு. எஸ். சிவராசாவுக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கமும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

திரு. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:–

'யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே பனை அபிவிருத்தி நடவடிக்கைகளும் கடற்றொழில் அபிவிருத்திகளுமே முக்கிய தொழில்களாக இருக்கின்றன. கடற்றொழில் அபிவிருத்திக்குப் பல உதவிகளும் வசதிகளும் வழங்கப்படுகின்றபோதும் பனைவள அபிவிருத்திக்கு எதுவித உதவிகளும் வசதிகளும் இல்லாமல் இருக்கின்றன.

ஒரு சமூகத்தையும் பொருளாதார நடவடிக்கைகளையும் பிரித்து இயக்கமுடியாது. கல்வி பொருளாதாரம் மேம்பாடடையவேண்டுமானால் சமூகம் கட்டுக்கோப்பான முறையில் ஒழுங்காக இயங்கிவரவேண்டும். சமூகக் குறைபாடுகளும், ஏற்றத் தாழ்வுகளும் சமூகமுன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை நாம் உணர்ந்து அதற்கேற்றவாறு செயற்படவேண்டும்.'

### பனம் தும்பு

பருத்தித்துறை எம்.பி.திரு. கே. துரைரத்தினம் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள பனைகளிலிருந்து மிக நீளமான பனம் தும்பைப் பெறமுடியும், பனம் தும்பு ஏற்றுமதிமூலம் ஐந்து கோடி ரூபா வருமானம் வெளிநாட்டுச் செலாவணியாகச் சம்பாதிக்கப்பட்டது.

### அபிவிருத்தி இல்லாமைக்கு காரணம்

தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவு சங்கசமாஜ செயலாளரும், பனம்பொருள் அபிவிருத்தி சபைத்தலைவருமான திரு க. நடராசாபேசுகையில் குறிப்பிட்டதாவது:

வடபகுதியின் மூலவளமான பனம்பொருள் உற்பத்தி ஒரு பல திமசகளோடு பிணைந்திருப்பதாலேயே அபிவிருத்தி அடைய முடியாமலிருப்பதற்கு காரணமாகும். இனிமேலாவது பனம் பொருள் அபிவிருத்தி சபை எடுக்கும் துரிதநடவடிக்கைகளுக்கு சகல எம். பிக்களும் தங்கள் பங்களிப்பை செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன்,

கூட்டுறவு முறையில் சிறந்து விளங்கும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களை அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் பாராட்டுவதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. கூட்டுறவுத்துறையிலுள்ள மற்றும் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களிலும் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கவேண்டும். இச்சங்கங்களில் சிறுபான்மை சமூகத்தவர்களுக்கு போதிய வேலைவாய்ப்பு வழங்கப்படுவதில்லை.

### ப. நோ. கூ. ச. வில் தலைவராக இல்லை

''ப. நோ. ச.சங்கத்தலைவர்களாக இதுவரை தெரிவின் மூலமாகவோ நியமன மூலமாகவோ சிறுபான்மை சமூகத்தைச்சேர்ந்த எவரும் இடம் பெறவில்லை. மொத்த நிலையில் இச்சங்கங்களின் ஊழியர்களாக 40 வீதம் இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், குறைந்தது ஒரு வீதமானவர்களாவது இருக்கிறார்களா என்பது சந்தேகப்படக்கூடியது.

அரசாங்கம் கடற்றொழில் அபிவிருத்திக்காகக் கடற்றொழிலாளர்களுக்கு பெரும் அளவு பொருளாதார சலுகைகளையும், உதவிகளையும் அளித்து வருகின்றது இதே போல் பனை வளத்தை நம்பி இருப்பவர்களுக்கும் அவர்களின் தொழிற்துறைக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டியது அவசியம் இதுவரைகாலமும் யாழ். மாவட்டத்துக்குள் முடங்கிக்கிடந்த பனை அபிவிருத்தி தற்போது நாட்டின் சகல பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது''. என்று சொன்னார்.

மற்றும் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ், வேலாயுதம்பிள்ளை, யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினரும் சமாஜத்தலைவருமான திரு. சு. நடேசு, மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. திரு. என். இராசேந்திரம், பனம் பொருள் அபிவிருத்திச்சபை இயக்குநர் திரு. மு. பொ. வீரவாகு (ஜே. பி, கணக்காளர் திரு, ஜே. எஸ். எஸ். சத்தியநாதன் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி உட்பட இன்னும்பலர் உரையாற்றினர்கள் சங்கச்செயலாளர் திரு. த. ஈஸ்வரன் நன்றியுரை கூறினர்,


T. V. ஏரியல் அமைப்பில்

முதன்மைமிக்க ஸ்தாபனம்

சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை

T V யில் சிரமமின்றி பார்க்க

உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.

நொடிப்பொழுதில், TV ஏரியல்

கோளாறுகள் சரி செய்யலாம்.

சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில் எடுப்பதற்கு

குறைந்த கட்டணம்

பல்வேறு TV செட்டுகளை

பினன்ஸ் வசதியுடன் பெறலாம்.

ரூபவாகினியில் தமிழ் திரைப்படங்கள்

காண்பிக்கப்படுவதால் உங்கள் செட்டுகளை

தயார்படுத்திக்கொள்ள

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்

ஶ்ரீதர் தியேட்டர் முன்,

யாழ்ப்பாணம்.


## நிறைகுறைந்த பாண்:

# அதிகாரிகள் திடீர்வேட்டையில் பேக்கரி சிக்கியது!

[யாழ்ப்பாணம்]

10 கிராம் நிறைகுறைவான பாணை விற்பனைசெய்த நெல்லியடியிலுள்ள பாண்பேக்கரியொன்று யாழ். உள்நாட்டு வர்த்தகத்திணைக்கள விலைக் கட்டுப்பாட்டதிகாரிகளின் திடீர் வேட்டையின்போது அகப்பட்டுக்கொண்டது.

வடமராட்சிப் பகுதியில் பாண் விற்பனையில் மோசடிகள் நடைபெறுவதாகவும் இதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் இப்பகுதிப் பாவனையாளர்கள் யாழ். உள்நாட்டுவர்த்தகத்திணைக்களத்திடமும் பருத்தித்துறைப் பாவனையாளர் சங்கத்திடமும் புகார் செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாணில் மோசடி செய்து பாவனையாளர்களைச் சுரண்டும் வர்த்தகர்களைக் கண்டுபிடிப்பதற்கு யாழ். உள்நாட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டது

விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் ஏழுவொன்றின் திடீர் வேட்டையில் நெல்லியடியிலுள்ள இந்தபேக்கரி 10கிராம் நிறைகுறைவான பாணைவிற்பனைசெய்தபோது அகப்பட்டுக்கொண்டது.

இப்பாணைவிற்பனை செய்தவருக் கெதிராக யாழ். உள்நாட்டு வர்த்தகத்திணைக்களம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது. [அ]

## தொழிற் சங்கக்கிளை

[மன்னார்]

தபால் தொலைதொடர்பு திணைக்கள உத்தியோகத்தர் தொழில் சங்கக் கிளையொன்று மன்னாரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

தபால் நிலையத்தில் நடைபெற்ற இவ்வங்குரார்ப்பணத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தபாலதிபர்களும், உதவிதபாலதிபர்களும் கலந்து கொண்டனர்.

## கிராமோதய...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பணிகளை மேற்கொள்வதென மேலும் இவர்கள் தீர்மானித்துள் ளனர்.

தெருவோரங்களிலுள்ள காடுகள், புதர்கள் என்பன வற்றை அகற்றுதல், குடிநீர் கிணறுகளைத் துப்பரவு செய்தல், கால்நடைகளுக்கான குளங்கள் கேணிகளை ஆழமாக்குதல், என்பன இச் சிரமதானப் பணிகளுள் அடங்கும்.

# கம்பர்மலை அறுவர் கொலை வழக்கு விசாரணை 14ம் திகதி

[புலோலி]

கம்பர்மலை பயங்கரதுப்பாக்கிச்சூட்டு அறுவர் கொலை வழக்கு விசாரணை மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் இம்மாதம் 14ம் திகதி விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது

வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ் அறுவர் கொலை வழக்கு விசாரணை கடந்த 3ம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் எழுவரில் உப்புவல்லையில் வைத்து மூவர் பயங்கரமாக கொலைசெய்பட்டனர். ஏனைய நான்கு எதிரிகளும் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

வழக்கு விசாரணையில் சாட்சியமளிப்பதற்குப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் ஆஜராகி இருக்கவில்லை.

நீதவான் வழக்கு விசாரணையை இம்மாதம் 14ம் திகதி வரை ஒத்திவைத்தார். (அ)

# வல்லை முக்கொலை வழக்கு 7ம் திகதிக்கு ஒத்திவைப்பு

[புலோலி]

வல்லை முக்கொலை வழக்கு இம்மாதம் 7–ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கம்பர்மலை அறுவர் கொலை வழக்கு சந்தேகநபர்களான அப்புத்துரை, தில்லைநடராசா, தேவராசா, துரைராசா, தங்கராசா, மகேந்திரன் ஆகிய அறுவரும் யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது உப்புவல்லையில் வைத்து அப்புத்துரை, தேவராசா, துரைராசா ஆகிய மூவரையும் துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும் கொலை செய்தார்கள் என்று பத்தொன்பது எதிரிகள் மீது குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்முக்கொலைவழக்குகடந்த 3–ம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டு இம்மாதம் 7–ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [அ]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு - சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

# இன்று கும்பாபிஷேகம்

ஏழாலை]

சூராவத்தை முத்துமாரி ஆலய எழுந்தருளி விநாயகர் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று திங்கள் நடைபெறுகிறது. பகல் அபிஷேக ஆராதனையும் இரவு விசேஷ நாதஸ்வரக்கச்சேரிகளும் விநாயக பெருமன் பூந்தண்டிகையில் வீதிஉலா வருதலும் இடம் பெறும். [அ]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# ''மத்திய கிழக்கின் யுத்த வரலாற்றில் புதிய சகாப்தம்

நிக்கோஸியா, செப். 5

''மேற்கு பெய்ரூட்டிலிருந்து பாலஸ்தீனிய துருப்புக்கள் வெளியேற ஆரம்பித்துள்ளது, மத்திய கிழக்கு யுத்தத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடக்கி வைத்துள்ளது லெபனுனின் துயர்மிகு நிலை தொடர்ந்து நீடிக்கின்ற போதிலும், சில அரசியல் முடிவுகளுக்கு இப்போதே வர முடியும்'' என்று பிரபல அரசியல் விமர்சகர் பி. டானி டோல் எழுதியுள்ளார்.

''பல சதாப்தங்களாக அமைதியிழந்து கிடக்கும் மத்திய கிழக்கு, இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் தவறுகளால் நெருக்கடிக்குள் மேலும் ஆழமாகச் சிக்கியுள்ளது லெபனுனில் சுமார் மூன்று மாதகால ஆக்கிரமிப்பும் குண்டு வீச்சுகளும் இஸ்ரேலினதுஎந்தவொரு நோக்கத்தையும் நிறைவேற்றவில்லை.

ஆக்கிரமிப்புயுத்தங்கள் எதுவும் எந்தவிதப் பிரச்னைகளையும் தீர்ப்பதில்லை. மாறாக அவை பிரச்னைகளை உருவாக்கி அவற்றை உக்கிரப்படுத்துகின்றன. இதைத்தான் டெல்அவிவும், வாஷிடங்டனில் லெபனுனில் செய்துள்ளன.

மேற்குக்கரை, காசாப்பகுதி கோலான் மேட்டுப் பகுதி ஆகியவற்றைக் கைப்பற்றி வைத்திருக்கும் பிரச்னையுடன் லெபனுன் பிரதேசத்தில் பாதியைக் கைப்பற்றி வைத்துள்ள பிரச்னையும் சேர்ந்துள்ளது சேர்ந்துள்ளது. லெபனுனைப் பிளவுபடுத்தி அதன் தெற்குப் பகுதியை ''பந்தோபஸ்து திட்டம்'' என்ற பெயரில் இஸ்ரேலுடன் சேர்க்கும் முயற்கள் மேற்படி பிரச்னையை உக்கிரப்படுத்தியுள்ளது லட்சக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர் ஏராளமான நகரங்களும், கிராமங்களும் அழிக்கப்பட்டுள்ளன இவை யாவற்றுக்கும் காரணம், இஸ்ரேலும், அமெரிக்காவும் மத்திய கிழக்கின் அரசியல் எதார்த்தங்களைக் கவனத்தில் கொள்ளாததே'' என்று எழுதியுள்ளார்.

[யாழ்ப்பாணம்]

அல்லைப்பிட்டி கிராமோதய சபையின் பிரிவில் உள் மண்கும்பான் கிழக்கில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாவலர் சனசமூக நிலயத்தின் நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர் ஏ. திருநாவுக்கரசு, உப தலைவர் க.குணரத்தினம், செயலாளர் சு. இராசலிங்கம், உப செயலாளர் தி, சந்திரகுமார், பொருளாளர் வீ. வைத்திலிங்கம் உறுப்பினர்கள் நுறுபேர். [வண்-நி]

றீகல் Daily 5 Shows
[யாழ்.நகர்]
BETSY
Sexy Film

சாந்தி யாழ் நகர்]
தினசரி 5 காட்சிகள்
MARTIN SHEEN
SAM WATERSTON
'Eagles Wing'
(Scope — Color)

## மண்டைதீவு பூம்புகார்வீதி திருத்துவதில் இளைஞர்துரிதம்

[யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுல் ஆரம்பிக்கப்பட்டுள்ள மண்டைதீவு பூம்பார் வீதியும், வீதியின் அணைக்கட்டு வேலைகளும் தொடர்ந்து சிரமதானமூலம் நடைபெற்று வருகின்றன. இவ்வீதி சுமார் 300 யார் தூரம்வரை இதுவரை திருததப்பட்டுள்ளது.

கடந்த 25ம் திகதி ஆரம்பமான இச்சிரமதான வேலை தொடர்ந்து மூன்று மாத காலம் நடைபெறுவதற்குத் திட்டமிட்டபோதிலும் இவ்வேலை துரிதமடைந்து வருவதால் திட்டமிட்ட காலத்திற்கு முன்பே வேலைகள் முடிவடைந்துவிடும் என்று இளைஞர் சேவை மன்ற மண்டைதீவுக்கிளையின் தலைவர் திரு. கே கணேசன் தெரிவித்தார்.

இளைஞர் சேவை மன்ற மண்டைதீவுக் கிளையில் உள்ள ஆண்களும் பெண்களுமாக நாற்றுக்கணக்கானேர் தினமும் இச்சிரமதானப்பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். தீவுப்பகுதியில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட நான்கு பாரிய வேலைத்திட்டங்களில், பூம்புகார்வீதி, அணைக்கட்டு வேலைகளும் ஒன்ருகும். இத்திட்டத்தில் வேலைசெய்பவர்களுக்கு 8 ரூபா வீதம் இளைஞர் சேவைமன்றம் உதவி வழங்கி வருகிறது. [வண்-நிரு]

122 வது வெற்றித் திருநாளாக
மனோகரா (யாழ்ப்பாணம்) 8-9-82 வரை
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
அலைகள் ஒய்வதில்லை (கலர்)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன் - விஜயா
நினைவில் நின்றவள்

## சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான சங்காபிஷேகம் இம்மாதம் 10ம் திகதி நடைபெறவிருக்கிறது. (அ)

## நூல் அறிமுகம்: 'பறவைகளே'

# பாரதி பாராட்டிய பறவைகளுக்கு ஒரு நூல்

பாரதியார் மக்கட் கவிஞர் அனைத்து உயிர்கள் மீதும் அன்பு சொரிந்த கவிஞர். பறவைகள் மீது மிகுந்த பற்றுள்ளவர். எத்தித் திருடும் காக்கைக்காக இரக்கப்பட்டவர். காக்கை குருவி எங்கள் சாதி என்றவர். சிட்டுக்குருவிபோல் விட்டு விடுதலையாக நிற்க விரும்பியவர்.

பாட்டுக்கு மாத்திரம் பாரதி மன்னரல்லர். புதிய வசன நடைக்கும் மாமன்னர் மேலைத்தேச அறிவியல் நுட்பங்களைத் தெள்ளுதமிழிற் காணவிரும்பியவர்.

பாரதியாரின் கனவுகளை நனவாக்கும்நூலாகத்தோன்றியிருக்கிறது பறவைகளே! பாரதி நூற்ருண்டைப் பிரதிபலிக்கும் அன்பு நூல் இது. அன்பே உலகம் எனக்காட்டும் நூல்.

நூலின் ஆரம்பமே அலாதியானது. நூலாசிரியர் பாரதியாரிலே எத்துணை ஈடுபாடுள்ளவர் என்பதை எளிய இனிய வசன நடையே காட்டிவிடுகின்றது.

நூல் ஆரம்பம் இதோ:

''மறவன்புலம் ஒரு சிற்றூர். சாவகச்சேரிக்குத் தென்பாகமாக உள்ளது. பரந்த வயல்வெளிகள். பொட்டல் பொட்டலாக மேட்டு நிலங்கள்; மேட்டு நிலங்களில் பனந்தோப்புகள்; சிறுசிறு குடியிருப்புகள் நடுவே பிள்ளையார் கோயில்.''

இவ்வாறு நூல் முழுவதும் வர்ணத்தொலைக்காட்சிகள். கையிலேஎடுத்தால்கீழேவைக்க முடியாத சுவைமிக்க நூல் என்பார்களே அதே நூல் இது.

23 அத்தியாயம்; 176பக்கம்; 23 வகையான படங்கள் முகப்பிலே ஆடும் பஞ்சவர்ணமயில் 15 ரூபா.

யாழ்ப்பாணத்திலே அச்சுக்கலை வளர்ச்சியைக் காட்டும் அழகிய பதிப்பு. கிடைக்குமிடம்: காந்தளகம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

இவ்வளவு விபரமும் சரி நூலாசிரியரைப்பற்றி ஒரு வார்த்தைகூட வரவில்லையே! வருகின்றது.

இன்றைய தமிழின், தமிழரின் இதயத்திலே சொல்லால், செயலால், பண்பால் அளப்பெரிய சேவை செய்துவரும் அறிவியல் மேதை ஏடன் ஐக்கியநாடுகள் வளர்ச்சித்திட்ட அலுவலக அறிஞர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தனே நூலாசிரியர்.

---க கணபதிப்பிள்ளை

## மத்தியஸ்தர்கள் தெரிவுப்பரீட்சை

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் மத்தியஸ்தர்களுக்கான தெரிவுப் பரீட்சையை நடாத்தவுள்ளது. இதற்கான பயிர்சி வகுப்புக்களை யாழ் மாவட்ட மத்தியஸ்தர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

இம் மாதம் 12ந்திகதி இவ்வகுப்புகள் காலை 9-30மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகும். [கி]

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

ராணி (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்பன் கலர்]

3-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
ஐந்து இளைஞர்களும், ஐவகை ஆயினும் ஆருயிர் நண்பர்கள் ஒவ்வொருவருடைய தனி வாழ்க்கையும் ஒருவகைப் பாலைவனம். இவர்களின் வாழ்வில் அழகும் இளமையும் எளிமையும், தூய்மையும் பரந்தநோக்குமுடைய பெண்ணெருத்தி வருகிருள். ஐவருக்கும் அவளில் ஒரு கண். அவளோ ஐவரிலும் ஒரு வகையான அன்பையே வைத்திருந்தாள். முடிவை அறியவெண் திரை விடையளிக்கும்.
பாலைவனச்சோலை
(கலர்)

## நாச்சிக்குடா காணிப்பங்கீடு: ஒருபகுதியினர் ஆட்சேபம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நாச்சிக்குடாப் பகுதியில் புனித சந்தியோகுமையர் ஆலயப் பகுதியில் மிகவும் நீண்டகாலமாகக் குடியேறி வாழ்ந்துவரும் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குக் குடியேற்றத்திட்டத்தின் கீழ் காணி வழங்கப்பட்டுள்ளதை அக்குடியேற்றத் திட்டத்தில் காணி பெற்ற வேறு சமூகத்தவர் ஆட்சேபித்துள்ளனர்.

நாச்சிக்குடாக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 450 ஏக்கர் காணிகள் ஏ, பி, சி, டி என நான்கு பிரிவுகளாகப் பிரித்து, தலா 2 ஏக்கர் வீதம் காணிக் கச்சேரியில் தெரிவு செய்யப்பட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

புனித சந்தியோகுமையர் ஆலயத்தை அண்மித்த பகுதி ஏ பிரிவுக்குட்பட்டதாகும். இப்பிரிவிலுள்ள காணிகள் அப்பகுதியில் மிகவும் நீண்டகாலமாகக்குடியேறி வாழ்ந்துவரும் சிறுபான்மைத்தமிழ்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது அப்பிரிவிலுள்ள 'பி', 'சி' பிரிவுகளில் உள்ள காணித் துண்டுகள் 95 வேறு குடும்பங்களுக்குத் தலா 2 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

'ஏ' பிரிவில் பரம்பரைபரம்பரையாக வாழ்ந்து வரும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணித்துண்டுகளைத் தமக்கே வழங்கவேண்டுமென்று மற்றச் சமூகத்தினர் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அரசாங்கஅதிபருக்கும், மேலதிகாரிகளுக்கும் இவர்கள் மகஜர்கள் அனுப்பியுள்ளதைத் தொடர்ந்து இது சம்பந்தமான விசாரணைகள் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்

பிரதாப் - ராதிகா
டெல்லி கணேஷ்
விஸ்வநாத் நடிக்கும்
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

★ அஞ்சல் அதிபர்களுக்கு

# அபாயப்படி வழங்க நடவடிக்கைவேண்டும்

## அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்க யாழ். கிளை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விசேட கொடுப்பனவு பணத்தை எடுத்துச் செல்லும் அஞ்சல் அதிபர்களுக்கும் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலகங்களின் அஞ்சல் அதிபர்களுக்கும் அபாயப்படி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தாய்ச்சங்கத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்க யாழ். கிளை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்க யாழ்ப்பாணக்கிளை தமது வெள்ளி விழாவை நேற்று யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலக அறையில் விமரிசையாகக் கொண்டாடியது.

கிளையின் தலைவர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நாட்டின் மேற்படி சங்கத்தின் கிளைகளின் தலைவர்களும், தாய்ச்சங்கத்தின் தலைவர் திரு. உபாலி எஸ். ஜெயசேகராவும் கலந்து கொண்டனர்

நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:

''அஞ்சல் தொலைதொடர்பு சேவையில் இருக்கும் பெண் ஊழியர்களுக்கு 90நாட்கள் பிரசவ லீவு வழங்கப்பட வேண்டும்.

''புதிய தமிழ் ஊழியர்களுக்கு ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் போதிய தேர்ச்சி இல்லாதகாரணத்தால்திணைக்கள விதிகளை அவர்கள் நன்கு படித்துத் தெரிந்துகொள்ளும் வகையில் சகல திணைக்கள விதிமுறை நூல்களும் தமிழில் வெளிவரவகை செய்யவேண்டும்'

சுன்னுகம், பருத்தித்துறை அலுவலகங்களை விஷேச தரத்துக்கு உயர்த்த வேண்டும். 1971க்கு முன்னர் 7 மணி தொடக்கம் இரவு 8மணிவரை திறக்கப்பட்டிருந்த அலுவலகங்கள் அனைத்தையும் மீண்டும் அவ்வாறு திறக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இத்துடன் சுன்னுகம், பருத்தித்துறை அலுவலகங்கள் பகல் 7 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை திறக்கப்படவேண்டும்.

''சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை, நல்லூர், யாழ். கடைவீதி, அல்வாய், புலோலி, மல்லாகம் உபஅஞ்சலகங்களாகத் தரமுயர்த்தப்படவேண்டுமென திணைக்களத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றது.

''சகல பொறுப்பு அஞ்சல் அதிபர்களுக்கும் இலவச குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றும் இதற்கான வழிவகைகளைச் செய்யுமாறு தாய்ச்சங்கத்தை கேட்டுக்கொள்வதுடன் வாடகைப் படியை பொறுப்பு அஞ்சல் அதிபரின் சம்பளத்திலிருந்து கழிப்பதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்''. (மா)

விஷச் சாராயம் அருந்தி

## பலியானோர் தொகை 60 ஆக அதிகரிப்பு

### 10 பேர்கள் பார்வை இழப்பு!

புதுடில்லி, செப். 5

கேரளத்தில் விஷம் கலந்த சாராயம் அருந்தியதால் பலியானோரின் தொகை 60 ஆக அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக 50 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 29 பேரின் நிலை மோசமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விஷச் சாராயம் அருந்தியவர்களில் 10 பேர் கண் பார்வையை இழந்துள்ளனர். (வெ)

## இப்படியும் நடக்கிறது

நாட்டின் பல பகுதிகளையும் போல, யாழ்ப்பாணத்திலும் மோட்டார் சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும் மிகவும் மலிந்து விட்டன.

வீட்டுக்குவீடு மோட்டார் சைக்கிள்தான்!

இதிலும் யாழ்ப்பாணத்தில் விசேடம்—

மீன் விற்பனை இப்பொழுது 'ஹொண்டா'வில்தான் [மின்னல் வேகத்தில்] நடக்கிறது!

'ஊடுருவி'

## ஷேக் அப்துல்லா உடல்நிலை கவலைக்கிடம்

புதுடில்லி செப். 5

காஷ்மீர் முதலமைச்சர் ஜனுப் ஷேக் அப்துல்லா இருதயநோய் காரணமாக சுகவீனமுற்றுள்ளார்.

இவரின் உடல் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

## உபஅலுவலக ஆலோசகர்கள்

[மன்னுர்]

மன்னுர்மாவட்ட அபிவிருத்திசபையின் மன்னுர் பட்டின உப அலுவலக ஆலோசகர்களாக திரு. வி. கைலாசபிள்ளை திரு. ஐ பிரான்சிஸ், ஜனுப் எம். ஓ எஸ் மரைக்கார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் இந்நியமனங்கள் யாவும் மன்னுர் மாவட்ட அபிவிருத்தி சபையினுல் வழங்கப்பட்டது.

## யோகேஸ்-குமார்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலம்தம்மிடம்கேட்டபோது தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென ஏற்கனவே தாம் தெரிவித்து விட்டதால் ஆதரவு வழங்குமாறு கேட்க முடியாதிருப்பதாக திரு. யோகேஸ்வரன் தெரிவித்ததாகவும் ஆனுலும் இதுவிஷயமாக கூட்டணித் தலைமைப் பீடத்துக்கு எடுத்துக்கூறுவதாக திரு. யோகேஸ்வரன் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

தனிநாடு நிறுவும் கூற்றுக்கு தமிழ் இனத்தின் தீர்ப்பை பெறவே சர்வஜனவாக்கெடுப்பாக இதைக்கருதுவதாக திரு. குமார் பொன்னம்பலம் விளக்கியபோது 1977–ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலேயே கூட்டணி சர்வஜனவாக்கெடுப்பை பெற்று விட்டதென்று திரு. யோகேஸ்வரன் பதிலளித்தாராம்.

இச்சந்திப்பு சுமார் 30 நிமிடம் வரை நீடித்தது. [மா]

## கிளைக் குழுத் தேர்தல்

(மன்னுர்)

மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிளைகளுக்கான குழுத்தேர்தல் இம் மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது

## போஷாக்குப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் உணவு போஷாக்குப் பிரிவு, யாழ். மாவட்டத்தின் வலிதெற்குப் பிரிவில் நடத்தும் உணவு போஷாக்குத் தொடர்பான பயிற்சிநெறி இன்று காலை உடுவிலிலுள்ள வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. வலி.தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி நெறியில் திட்டமிடல் அதிகாரி திரு வி. எஸ். சுவாமிநாதன், யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா உறுப்பினர் டாக்டர் ஏ. நடராசா, மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம், சுன்னுகம் ப. நோ. கூ. ச. தலைவர் திரு. ச. முத்துலிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (மா)

# இந்தோனேஷியாவில் பஞ்சம் 100க்கு அதிகமானோர் பலி!

ஜகார்த்தா செப். 5

இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தினுல் நூற்றுக்குமதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இங்கு வரட்சியினுல் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டதையடுத்தே இப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் 15 கோடி மக்கள் வாழ்கிருர்கள். இங்குள்ள பலதீவுகள் இப்பஞ்சத்தினுல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பப்புவாநியூகினிக்கு அருகிலுள்ள தீவொன்றில் பஞ்சத்தினுல் 118 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்குமாறு அரச அதிகாரிகளுக்கு இந்தோனேஷியா ஜனுதிபதி சுகார்ட்டோ உத்தரவிட்டுள்ளார். (வெ)

## கால்நடை பொருளாதாரப் பிரிவு

(கொழும்பு)

ஜெர்மன் சமஷ்டிக்குடியரசின் உதவியுடன் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கால்நடை பொருளாதாரப் பிரிவொன்றை நிறுவவுள்ளது. (வெ)

## சிங்கைப்பிரதமர் இந்தோனேஷியா விஜயம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் பிரதமமந்திரி திரு. லீகுவான்யூ நாளை செவ்வாய்க்கிழமை இந்தோனேஷியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் அங்கு இந்தோனேஷியா ஜனுதிபதி திரு சுகார்ட்டோவைச் சந்தித்து சர்வதேசப்பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடவுள்ளார். (வெ)

## கற்பகவிநாயகர் அலங்காரஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயஅலங்காரஉற்சவம்இன்றுநடைபெறவுள்ளது காலை தீர்த்தோற்சவமும் இரவு திருவூஞ்சல், திருமுறைப்பாராயணமும், சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரின் பஜனையும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [மா]


## ஹோம் பினுன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

**ORION-12''** (T. V. BLACK and WHITE)

விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்
எம்மிடம் உள்ள அவசர தேவையான
மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமைக் காரியாலயம்:
ஹோம் பினுன்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி;58910

கிளைக் காரியாலயம்:
ஹோம் பினுன்ஸ் லிமிட்
இல. 82, கன்னுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310



## பீடிப் புகையிலையாளர் அவதி

[சுழிபுரம்]

சுழிபுரம் பகுதியில் பீடிப் புகையிலை உற்பத்தி செய்தவர்கள் விற்பனை செய்யமுடியாது அவதியுறுகின்றனர்.

புகையிலையை முதல் பாதுகாப்பாக வைக்க இடம் இல்லாமலும், புகையிலைச் செய்கையால் பட்ட கடனை அடைக்க முடியாதும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

## நினைவஞ்சலி



ச. சூரியகுமார்
[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]

தோற்றம்:
24-7-65

மறைவு:
18-8-81

உயிருக்குள் உயிராய், உணர்வின் ஒளிவடிவாய், நம்பிக்கை சுடராய் ஒளி வீசிய எங்கள் இனிய செல்வமே! உன்னைப் பறிகொடுத்து ஓராண்டாயினும், உன் அன்புச்செயல்களை தினமும் நினைவுகூர்ந்து பிரிவால் துடிதுடிக்கும்– பெற்ளூர் சபாரட்னம் தம்பதிகள், தங்கை - சுரேந்தின் அன்ரி - மகேஸ்வரி

பலாலி வீதி, கந்தர்மடம். ‹447

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் [illegible] மேற்கு வீதி, 68–ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] செப். 6–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 160236/81
Elanadu — P. O. Box 49 Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.